Registered as a News Paper in Sri Lanka பக்கங்கள்: 04 விலை ரூபா: 4-00

# ஈழநாதம்

THE EELANAATHAM மக்கள் தினசரி PEOPLES DAILY

நாதம் 01 மாசி (09 02 1991) சனிக்கிழமை ஓசை 356

## குப்பைத் தொட்டிகளில் சிறிலங்கா தேசியக் கொடி

(கொழும்பு)

சுதந்திர தினத்தன்று கொழும்பு வீதிகளை அலங்கரித்த தேசியக் கொடிகள் வீதியோரங்களில் உள்ள குப்பைத் தொட்டிகளில் இருந்ததை நேற்று முன்தினம் ஐலண்ட் பத்திரிகை முன் பக்கச் செய்தி ஒன்றை வெளியிட்டுள்ளது. கொழும்பு மாநகர நகர சுத்திகரிப்புத் தொழிலாளர் நூற்றுக் கணக்கில் இந்தக் கொடிகளை (4 ஆம் பக்கம் பார்க்க)

இராணுவத் தளபதி, அரச அதிபர் தலைமையில்

# திருமலையில் குடியேற்றங்கள்

# விரிவு படுத்த விசேட குழு

## திருமலைக்கு பிரேமதாஸாவின் வருகையின் பின் ஏற்பாடு

(திருமலை)

திருமலை மாவட்டத்தில் புனர்வாழ்வு என்ற போர்வையில் சிங்களவரைக் குடியமர்த்தும் நடவடிக்கைகள் தீவிரமாக இடம்பெற்று வருகின்றன. இக் குடியேற்ற விரிவாக்கத்திற்கு திருமலை இராணுவத் தளபதி, அரச அதிபர் தலைமையிலான அரச நிறுவன உயர் அதிகாரிகளின் விசேட குழுவொன்றும் செயற்பட்டு வருகின்றது.

1990 ஆனி மாதத்தில் ஏற்பட்ட தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும் இலங்கை இராணுவத்திற்கும் இடையேயான யுத்தத்தைத் தொடர்ந்து திருமலை மாவட்டத்தின் பல பகுதிகளிலும் சிங்களவர்களை குடியமர்த்தும் பணியில் சிறிலங்கா அரசு ஈடுபட்டு வருகிறது. ஆனி மாதத்தில் ஏற்பட்ட யுத்தத்தை தொடர்ந்து சிங்கள மக்களை குடியமர்த்தும் பணியில் தமிழ் மக்களுக்குச் சொந்தமான தனியார் காணிகள் கூட பாவிக்கப்படுகிறது. மேலும் வீரகத்திப் பிள்ளையார் ஆலயம், மாரியம்மன் ஆலயம் ஆகியவற்றிற்குச் சொந்தமான காணிகளில் கூட இக் குடியேற்றம் நடைபெற்று வருகிறது.

(4 ஆம் பக்கம் பார்க்க)

## வீரவணக்கம்

### அஜந்தன்

(யாழ்ப்பாணம்)

சிறிலங்கா இராணுவத்தினருடன் நேற்று இடம்பெற்ற மோதல் ஒன்றில் அஜந்தன் (சின்னையா சூரியகுமார், செட்டிகுளம்) என்றபோராளி வீரமரணமடைந்துள்ளார்.

இவருக்குத் தமிழீழ விடுதலைப் புலிகள் தமது வீரவணக்கத்தைத் தெரிவித்துள்ளனர்.

## தச்சன்காட்டுச்சந்தி மோதலில் 9 படை பலி; 57 பேர் காயம்

(கொழும்பு)

மாவிட்டபுரம் தச்சன்காட்டு இராணுவ மினிமுகாம் மீது கடந்த செவ்வாய் இரவு விடுதலைப்புலிகள் மேற்கொண்ட தாக்குதலில் ஒன்பது இராணுவத்தினர் உயிரிழந்ததாக கொழும்பின் இராணுவ வட்டாரங்களை மேற்கோள் காட்டி ஏஜென்சி செய்திகள் வெளிவந்துள்ளன. இச்சண்டையில்மேலும் ஐம்பத்திமேழு சிப்பாய்கள் காயமடைந்துள்ளதாகவும் அச்செய்திகள் தெரிவிக்கின்றன.

## மட்டக்களப்பில் கண்ணிவெடி; கவசவாகனம்முற்றாகச்சேதம்

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு மாவட்டத்தில் ரோந்து நடவடிக்கையில் ஈடுபட்டிருந்த சிறிலங்கா இராணுவ வாகன அணி ஒன்றின் மீது விடுதலைப் புலிகள் நடாத்திய கண்ணிவெடித் தாக்குதலில் இராணுவத்தினரின் கவச வாகனம் ஒன்று சிதறியது.

கடந்த புதன்கிழமை மாலை 5.45 மணியளவில் வெல்லாவெளி இராணுவ முகாமில் இருந்து களுவாஞ்சிக்குடி இராணுவ முகாமை நோக்கி ஒரு கவசவாகனம், மற்றும் ஒரு ட்றக், ஒரு ஜீப் ஆகிய இராணுவ வாகனங்களில் சென்று கொண்டிருந்த அணி மீது பெரிய போரதீவுக்கும் பட்டிருப்புப் பாலத்துக்கும் இடையில் வைத்து விடுதலைப்புலி

(4 ஆம் பக்கம் பார்க்க)

### 8 படை பலி 4 பேர் காயம்

(கொழும்பு)

விடுதலைப் புலிகள் நேற்று முன் தினம் மணலாற்றில் மேற்கொண்ட தாக்குதலில் 8 இராணுவத்தினர் கொல்லப்பட்டதாகவும், நால்வர் படுகாயம் அடைந்ததாகவும் சிறிலங்காப் பாதுகாப்பு வட்டாரங்களை மேற்கோள் காட்டி ஏஜென்சிச் செய்திகள் தெரிவித்தன.

இத் தாக்குதலில் ஏழு பேர் கொல்லப்பட்டதாகவும், மூவர் காயமடைந்ததாகவும் முன்னர் வந்த செய்திகள் தெரிவித்தன.

## கஜுவத்தையில் இராணுவம்மீது புலிகள் அதிரடித் தாக்குதல்

(மன்னார்)

மன்னார் மாவட்டத்தில் கஜுவத்தை என்ற இடத்தில் ரோந்து சென்ற சிறிலங்கா இராணுவத்தினர் மீது விடுதலைப்புலிகள் அதிரடித் தாக்குதல் நடாத்தியுள்ளனர்.

நேற்று முன்தினம் நண்பகல் 12 மணியளவில் கஜுவத்தை இராணுவ முகாமில் இருந்து சிலாவத்துறை இராணுவ முகாமை நோக்கிச் சென்று கொண்டிருந்த இராணுவத்தினர் மீது முகாமில் இருந்து ஒன்றரை மைல் தொலைவில் வைத்து விடுதலைப் புலிகள்

(4 ஆம் பக்கம் பார்க்க)

## டிக்சிற் போன்று ஜாவும் பாரபட்சமாக நடக்கக் கூடாது

### : சந்தானந்த மகாநாயக்க தேரோ

(கொழும்பு)

இந்தியத் தூதுவராக முன்பு கடமையாற்றிய ஜே. என். டிக்சிற் பாரபட்சமாக நடந்து கொண்டார் என்றும், இப்போதைய தூதுவர் அப்படி நடந்து கொள்ளக் கூடாது என்றும் அஸ்கிரிய பீடாதிபதி பலிப்பான சந்தானந்த மகாநாயக்க தேரோ தெரிவித்துள்ளார்.

தூதுவர் என். எம். ஜாவிடம் உரையாடிய வண. பலிப்

(4 ஆம் பக்கம் பார்க்க)

அமெரிக்க இராணுவத்தின் பணிக்கு

## சவூதி அரேபியாவிற்கு 5000 எகிப்தியப் பெண்கள்

(கெய்ரோ)

வளைகுடாவில் அமெரிக்க இராணுவத்தினரின் பணிகளுக்கென 5000 பெண்களை எகிப்திய அரசாங்கம் அனுப்பியுள்ளது.

இது தொடர்பாக எகிப்திய அரசாங்கத்துக்கும், அமெரிக்காவிற்கும் எதிரான உணர்வுகள் பரவலாக வந்து கொண்டிருக்கும் அதேவேளை

(4 ஆம் பக்கம் பார்க்க)

## மாலைதீவு அமெரிக்காவிற்கு எண்ணெய் வழங்க மறுப்பு

(கொழும்பு)

அமெரிக்காவும் அதன்சார்பு நாடுகளும் விமானங்களுக்கு எரிபொருள் நிரப்புவதற்கும் துறைமுக வசதிகளை உபயோகிப்பதற்கும் மாலைதீவு அரசாங்கம் அனுமதிவழங்க மறுத்துள்ளது. இத்தகவலைக் கொழும்பில் மாலைதீவு உயர்ஸ்தானிகர் அஹெமட் அப்துல்லா கடந்த புதன்று தெரிவித்தார்.

பாரசீக வளைகுடா யுத்தத்தில் அப்துல் கையூமின் அரசா

(4 ஆம் பக்கம் பார்க்க)

## ஈராக்கை நீண்ட காலம் ஆக்கிரமிப்பதைவிரும்பவில்லை

### : மித்ரோங்

(பரிஸ்)

"ஈராக்கை அமெரிக்கா தலைமையிலானகூட்டுப்படைகள் நீண்டகாலம் ஆக்கிரமிப்பதை நாம் விரும்பவில்லை" என்று பிரான்சின் ஜனாதிபதி மித்ரோங் தெரிவித்துள்ளார்.

பரிஸில் நேற்றுமுன்தினம் தொலைக்காட்சி ஒன்றிற்கு

(4 ஆம் பக்கம் பார்க்க)

## உணவு முத்திரைக்கு நெல் விநியோகம்

வடமராட்சி கிழக்குப் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம் தனது பகுதியிலுள்ள மக்களுக்கு நெல்லினை விநியோகித்து வருகின்றது.

ஐந்தாம் கட்ட உணவு முத்திரைப் புள்ளிகளின் பெறுமதிக்கே ஒவ்வொரு குடும்பத்திற்கும் நெல்லினை விநியோகித்து வருகின்றது.

கிளிநொச்சி மாவட்டத்தில் இருந்து கொள்வனவு செய்யப்பட்ட நெல்லே இவ்வாறு விநியோகிக்கப்பட்டு வருகின்றது. (86)

## சொய்ஸா விசாரணையை

## குற்றம் செய்யவில்லையென்றால் அரசாங்கம் ஏன் எதிர்க்கிறது

(கொழும்பு)

அரசு உண்மையிலேயே குற்றம் செய்யவில்லையெனில் ஏன் நீதி விசாரணை நடத்துவதை எதிர்க்க வேண்டுமென சுதந்திரக் கட்சி எம். பி. மகிந்த ராஜபக்ஸ கேள்வி எழுப்பியுள்ளார்.

பத்திரிகையாளர் றிச்சர்ட் டி சொய்ஸா கொல்லப்பட்டமை தொடர்பாக நீதி

(4ஆம் பக்கம் பார்க்க)

## சாஸ்திரி கூழாங்குளம் குண்டுவீச்சில் ஒருவர் பலி

(வவுனியா)

வவுனியா மாவட்டத்தில் உள்ள சாஸ்திரி கூழாங்குளம் பகுதி மீது சிறிலங்கா விமானப்படையினர் நடாத்திய குண்டு வீச்சில் ஒருவர் கொல்லப்பட்டார்.

(4 ஆம் பக்கம் பார்க்க)

## விளம்பரம்

### கிளீன்கட் போட்டோஸ்ரற்

போட்டோஸ்ரற் பிரதிகளையும், றோனியோ பிரதிகளையும் தமிழ், ஆங்கில ரைப்பிங் வேலைகளையும் உடனடியாக செய்து பெற்றுக்கொள்ள கிளீன்கட் 239 மின்சாரநிலைய வீதி, யாழ்ப்பாணம். (B-1958)

### The Jaffna Education Center

யாழ்ப்பாணக் கல்வி நிலையம்; (சாந்தி சினிமா முன்பாக மேல்மாடியில்) O/L, A/L. I. A B, Spoken English, Short hand, Typing, இரு மொழிகளிலும் நடைபெறுகின்றன. பெண்களுக்கு விடுதி வசதியுமுண்டு. தனித்துவம் வாய்ந்த ஆசிரியர்களினால் பயிற்றப்படும். (B-1965)

### வரலாறு

விற்பனையாகின்றது! வரலாறு- ஆண்டு: 11, வரலாறு- ஆண்டு: 6 (புதியபாடத்திட்டம்). ஆக்கியோன்: ந தர்மபாலன் சகல புத்தகசாலைகளிலும் பெற்றுக்கொள்ளலாம் (R-1083)


# துப்பாக்கிகளை இரு வாரத்தில் ஒப்படைக்க வேண்டும்

(கொழும்பு)

பாதுகாப்பு அமைச்சினால் வழங்கப்பட்டிருக்கும் துப்பாக்கிகளை வைத்திருப்பவர்கள் கடந்த புதன் முதல் இரண்டு வாரத்துக்கிடையில் அவற்றைத் திருப்பிக் கையளிக்க வேண்டும் என்று அரசாங்கம் தீர்மானித்துள்ளதாகப் பாதுகாப்பு ராஜாங்க அமைச்சர் ரஞ்சன் விஜேயரட்னா நேற்று முன்தினம் செய்தியாளர் மாநாட்டில் தெரிவித்தார்.

மேற்படி ஆயுதங்களைத்தம் வசம் வைத்திருப்பவர்கள் அவர்களுக்கு அருகாமையில் உள்ள பொலிஸ் நிலையங்களில் ஒப்படைக்க வேண்டும். இதேவேளை அரசாங்க அதிபர்களின் அனுமதியுடன் ஆயுதங்களை வைத்திருப்பவர்கள் எதிர்வரும் ஜூன் மாதம் 30 ஆம் திகதிவரை இந்த ஆயுதங்களை வைத்திருக்க முடியும் என்றும் அமைச்சர் தெரிவித்தார். இந்த ஆயுதங்களைத் தொடர்ந்தும் வைத்திருக்க விரும்பியவர்கள் அதற்கான அனுமதியை அரசாங்க அதிபரிடம் புதிதாக விண்ணப்பித்துப் பெற்றுக்கொள்ள வேண்டும். அரசாங்க அதிபரிடம் மேற்படி ஆயுதங்களுக்கான அனுமதியைப் புதுப்பிக்காமல் வைத்திருப்பவர்கள்மீது அவசரகாலச் சட்டத்தின்கீழ் வழக்குத் தொடரப்பட்டுத் தண்டனை வழங்கப்படும் என்று மேலும் ரஞ்சன் தெரிவித்தார்.

# 750 பயிலுனர் தெரிவு

(மாங்குளம்)

தேசிய தொழில் பயிலுனர் சபை 1991 ஆம் ஆண்டு வடபகுதியைச் சேர்ந்த 750 பயிலுனர்கள் தெரிவு செய்யப்பட்டு பல்வேறு கைப்பணி பொறியியல் கைத்தொழிற்துறைகளில் பயிற்சியளிக்கப்படவுள்ளனர்.

முல்லைத்தீவு, மாந்தை கிழக்கு ஆகிய உதவி அரச அதிபர் பிரிவுகளிலிருந்தும் இத்தொழில் பயிலுனர்கள் தெரிவு செய்யப்படவுள்ளனர் இத்திட்டத்தில் ஜனசக்திக் குடும்பங்களைச் சேர்ந்த இளைஞர் யுவதிகளுக்கு இத்தொழில் பயிலுனர் திட்டத்தில் முன்னுரிமை அளிக்கப்படும். (82)

# விசேட பயிற்சி வகுப்புக்கள்

(கொழும்பு)

கணிதம், விஞ்ஞானம், மற்றும் ஆங்கிலப் பாடங்களில் மாணவர்களுக்கு விசேட பயிற்சிகள் அளிக்கப்படும்என கல்வி அமைச்சு அறிவித்துள்ளது.

மேலதிக வகுப்புக்களை ஒழுங்கு செய்து மாணவர்களுக்கு வசதி செய்து கொடுக்கப்படும் என்றும் கல்வி அமைச்சு அறிவித்துள்ளது.

# தாதிமார் பற்றாக்குறை நீக்க நடவடிக்கை ஏதுமில்லை

(யாழ்ப்பாணம்)

பிராந்திய சுகாதார நிலையத்தின் கீழ் உள்ள மருத்துவமனைகளில் நிலவும் தாதியர் பற்றாக்குறையை நீக்கி வைப்பதற்கு சுகாதார அமைச்சு எந்த நடவடிக்கையையும் எடுக்கவில்லை.

தாதியர் பற்றாக்குறை பற்றி இவ்வைத்தியசாலைகளின் மருத்துவ அதிகாரிகள் கருத்து வெளியிடுகையில் தற்பொழுது நோயாளிகளின் தொகை அதிகரித்துள்ளதனால் தாதிகளின் சேவையும் அதிகம் தேவைப்படுவதாகவும் மேலும் தற்போதைய ஓய்வூதியத் திட்டத்தின் கீழ் பல தாதிகள் ஓய்வூதியம் பெற இருப்பதால் தாதிகள் பற்றாக்குறை மேலும் அதிகரிக்கும் என்றும் தெரிவித்தனர். ஆனால் இப்பற்றாக்குறை குறித்து சுகாதார அமைச்சு கடந்த இரு ஆண்டுகளாக எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை. (க)

# இடம்பெயர்ந்தோர் சங்கம் பத்து அம்சக் கோரிக்கை

(யாழ்ப்பாணம்)

வலி. வடக்கு இடம்பெயர்ந்தோர் சங்க உறுப்பினர்கள் சிலரால் நேற்று முன்தினம் யாழ். அரச அதிபரிடம் பத்து அம்சக் கோரிக்கைகள் அடங்கிய மகஜர் ஒன்று சமர்ப்பிக்கப்பட்டது.

இந்த மகஜரில் காங்கேசன்துறை, தெல்லிப்பழை, மயிலிட்டி ஆகிய உள்ளூராட்சிப் பிரிவுகளைச் சேர்ந்த மக்கள் 1983 ஆம் ஆண்டிலிருந்தே இராணுவத் தாக்குதல்களால் பாதிக்கப்பட்டு சொந்த மண்ணிலேயே அகதிகளாக வாழ்ந்து வருகின்றனர். ஆனால் எந்த அத்தியாவசியப்பொருள்களும் போதிய அளவு வழங்கப்படவில்லை; இப்பகுதியில் வாழும் மக்கள் பெரும்பாலும் விவசாயம், கடல், சீவல் தொழில், கூலித்தொழிலாளர் இவர்களுடன் ஏனைய பல தொழிலாளர்களும் பாதிக்கப்பட்டு வாழ்வழிவகையற்று வாழ்கின்றனர்.

இவர்களுக்கான நடவடிக்கைகள் உடனடியாக செய்ய வேண்டுமென்ற கோரிக்கைகளை இந்த மகஜர் குறிப்பிட்டுள்ளது. (வோ)

# புதிய நிர்வாக சபை தெரிவு

(யாழ்ப்பாணம்)

யாழ். பல்கலைக்கழகத்தின் மாணவர் ஒன்றியத்திற்கு நேற்று முன்தினம் நடைபெற்ற கூட்டத்தில் புதிய நிர்வாக சபை தெரிவு செய்யப்பட்டது.

நிர்வாக சபையின் தலைவராக அ. வி. மரியநாயகம், உபதலைவராக ஜே. கிரிதரன், செயலாளராக ச. வசந்தி, இளம் பொருளாளராக லே. சுமித்திரா, பத்திராதிபராக பொ. பவானி ஆகியோரும் மற்றும் நிர்வாக சபையின் உறுப்பினர்கள் அனைத்து பீடங்களில் இருந்தும் தெரிவு செய்யப்பட்டனர்.

# உப மின் நிலைய கட்டடம் வியாபாரிகளால் ஆக்கிரமிப்பு

(யாழ்ப்பாணம்)

ஓட்டுமடத்தில் உள்ள இலங்கை மின்சாரசபையின் உபமின் நிலையத்தை சிறு வர்த்தக நிலையங்களும் தற்காலிக வியாபாரிகளும் ஆக்கிரமித்துள்ளதால் இம் மின் நிலையத்தின் பெறுமதி வாய்ந்த மின் உபகரணங்கள் பல சேதமடையும் அபாயம் தோன்றியுள்ளது.

கடந்த பல மாதங்களாக மின் விநியோகம் தடைப்பட்டதையடுத்து இந்த உப மின் நிலைய வளவினுள் சிறுவர்த்தக நிலையங்களும் தற்காலிக வியாபாரிகளும் புகுந்து தமது நடவடிக்கைகளை சுதந்திரமாக மேற்கொள்வதை மின்சாரசபையோ அல்லது மாநகரசபையோ தடுத்து நிறுத்தாமல் இருப்பதால் இந்த மின்நிலையத்தின் மின் உபகரணங்கள் சேதமடையும் அபாயநிலை உருவாகியுள்ளது. (ஊ)

# சிறுவர் பூங்கா மெருகேறுகிறது

(மானிப்பாய்)

மானிப்பாயில் அமைந்துள்ள தியாக சீலம் சிறுவர் பூங்கா நவீன முறையில் மெருகூட்டப்பட்டிருக்கிறது.

மானிப்பாய் பிரதேசப் பொறுப்பாளர் திரு. சங்கர் இதற்கான செயற்பாடுகளை மேற்கொண்டமையால் தற்போது விலங்கின கண்காட்சிப் பிரிவுகள் திறக்கப்பட்டுள்ளது இதனால் இப்பூங்காவிற்கு தினமும் பெருந்தொகையான சிறுவர்கள்வந்து பயனடைகின்றனர். (க)

# வெலிக்கடை விற்பனைக்கு

(கொழும்பு)

பல கொலைகளுக்கும் பெயர்போன கொழும்பு வெலிக்கடை சிறைச்சாலையை அரசாங்கம் விற்கவுள்ளதாம். 1983 ஜூலையில் இச்சிறைச்சாலை வளாகத்தினுள் 53 தமிழ் அரசியல் கைதிகள் கொலைப்பட்டார்கள்.

நீதி அமைச்சு இச்சிறைச்சாலைக் கட்டடத்தையும், காணியையும் 1580 கோடிக்கு விற்கவுள்ளது. இப்பணத்தைக் கொண்டு நவாலேல பகுதியில் போதிய பாதுகாப்பு வசதிகளுடன் கூடிய சிறைச்சாலை ஒன்று அமைக்கப்படவுள்ளது.

# வெள்ளைப் புலிகள்

(புவனேஸ்வர்)

ஒரிஸ்ஸா புவனேஸ்வரில் உள்ள நந்தார் கால உயிரியல் பூங்கா வெள்ளைப் புலிகளை பாதுகாப்பதில் தனிச் சிறப்புப் பெற்றது. உலகிலேயே அதிக அளவிலான வெள்ளைப் புலிகள் இங்குதான் உள்ளன. தற்போது இங்கு 24 வெள்ளைப் புலிகள் உள்ளன.

12 ஹெக்ரர் நிலப் பரப்பில் வெள்ளைப் புலிகளைப் பாதுகாப்பதற்கானவகையில் ரூ 27 இலட்சம் செலவான திட்டம் ஒன்றும் உருவாக்கப்பட்டுள்ளது. ஏலவே பல வெள்ளைப் புலிகளை ஊர்வாசிகள் தின்று தீர்த்து விட்டார்களாம்.

# இடமாற்றம்

(மாங்குளம்)

முல்லைத்தீவு தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபை அடுத்த வாரம் முதல் கரிப்பட்ட முறிப்பில் இயங்கவுள்ளது.

மாங்குளத்தில்சேதமடைந்த இவ்வலுவலக இடிபாடுகளுக்குள் இருந்த முக்கிய ஆவணங்கள் பல மாவட்ட முகாமையாளர் திரு. கே.ரி.எம். விஜயகுமார் மற்றும் அதிகாரிகளினால் பாதுகாக்கப்பட்டுள்ளன. (82)


## வாடிக்கையாளர்களுக்கு ஒரு நற்செய்தி

எங்கள் நிதி நிறுவனம் 1988 ஆம் ஆண்டின் 78 ஆம் இலக்க நிதி நிறுவனங்கள் சட்டத்தின் கீழ் இலங்கை மத்திய வங்கியினால் பதிவு செய்யப்பட்டுள்ளது என்பதனை மகிழ்ச்சியுடன் அறியத்தருகிறோம்.

Licence No. NBS/R/90/021

ஷப்றா யுனிக்கோ பினான்ஸ் லிமிட்டெட்,

61, நியு புல்லர்ஸ் வீதி, கொழும்பு 4.

207, மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம்.

(B. 1996)




## நினைவு கூருகின்றோம்

### பெப்ரவரி 9

1986இல் சிறிலங்கா இராணுவத்தால் சுடப்பட்டு வீரமரணமடைந்த

மகேஸ்வரன்

1987இல் மன்னாரில் இடம் பெற்ற மோதலில் வீரமரணமடைந்த

தங்கேஸ் (சா.ஜெபக்குமார் - நறுவிலிக்குளம்)

விஸ்ணு (ச.அந்தோனிப்பிள்ளை-நெடுக்கண்டல்)

ரகு (செ.யோகராசா - திருக்கோயில்)

1988இல் வீரமரணமடைந்த

2ஆம்லெப்.நிந்தி (ஆ கணேசமூர்த்தி-தம்பிலுவில்)

இதே ஆண்டு களுதாவளையில் நடந்த முற்றுகையின் போது சயனைட் உட்கொண்டு வீரமரணமடைந்த

லெப். சிவம் (அ. சிவஞானம்)

இதே ஆண்டு தேசத்துரோகிகளால் சுட்டுக் கொல்லப்பட்ட

★ வே. சந்திரன்

1989ஆம் ஆண்டு யாழ்ப்பாணத்தில் இந்திய இராணுவத்தினரின் எதிர்பாராத தாக்குதலில் வீரமரணமடைந்த

கப்டன் கோபி (வீ. சிவகுமார் - அரியாலை)

ஆகியோரை இந்நாளில் நினைவு கூருகின்றோம்.

★ மேற்குறிப்பிடப்பட்ட போராளி ஈரோஸ் அமைப்பு இயங்கிய காலத்தில் அதனுடன் இணைந்து செயற்பட்ட மாவீரராவர்

– விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணி

(B-1988)

★ சிந்தனைக்கு ★

விவேகமும் வீரமும் கொண்ட மனிதன்தான்,
தன் தவற்றை ஒத்துக் கொள்ளத் துணிவான்;

— பெஞ்சமின் ஃபிராங்க்ளின்

ஈழநாதம்

81, மகேந்திரா வீதி, யாழ்ப்பாணம். 09-02-1991
தொலைபேசி
ஆசிரியபீடம்: 025 - 2839 நிர்வாகபீடம்: 2298
த.பெ.எண் 05

# உண்மை தெரிந்தவனுக்கு உணர்த்தத் தேவையில்லை

ஈராக் மீது அமெரிக்க தலைமையிலான கூட்டுப் படையினர் நடத்தி வரும் விமானத் தாக்குதல்களில் சிறுவர்கள், பெண்கள், வயோதிபர்கள் உட்பட பல நூற்றுக்கணக்கில் பொதுமக்கள் இறந்ததாகவும் பாடசாலைகள், மசூதிகள், குடியிருப்புக்கள் அழிக்கப் பட்டதாகவும் ஈராக் தொடர்ச்சியாகக் குற்றம் சாட்டி வருகின்றது.

இதனை உறுதிப்படுத்துவதற்காக வெளிநாட்டுப் பத்திரிகையாளர்களை இப் பகுதிக்கு அழைத்துச் சென்று காட்டியும் உள்ளது. இதில் பாக்தாத்திற்கு 120 கி.மீற்றர் வடக்கே உள்ள கிராமம் ஒன்று முற்றாகவே அழிந்து விட்டதை செய்தியாளர்கள் நேரில் பார்வையிட்டு உறுதிப் படுத்தியுள்ளனர்.

இவ்வாறு குடியிருப்புக்கள் மீது குண்டு வீசப்படுவதை போர் ஆரம்பத்தின் பின்னர் தொடர்ச்சியாக பாக்தாத்தில் தங்கியுள்ள ஒரே ஒரு செய்தி நிறுவனமான அமெரிக்க கேபிள் நியூஸ் நெற்வேக் (சி என் என்) செய்தியாளரும் உறுதிப்படுத்தியதோடு போரில் இறந்த காயப்பட்ட குழந்தைகள், பெண்கள், வயோதிபர்களின் படங்களையும் ஒளிபரப்பியுள்ளது.

இவற்றிற்கும் மேலாக, முன்னாள் அமெரிக்க சட்டமா அதிபர் ராம்சே கிளார்க் ஈராக்கின் யுத்த அழிவைப் பார்வையிட்ட பின்னர் அமெரிக்காவும் அதன் சார்பு நாடுகளும் ஈராக்கிய குடியிருப்புப் பகுதிகளை கடுமையாகத் தாக்கி வருவதாகத் தெரிவித்துள்ளதோடு பாக்தாத்தைவிட பஸ்ரா நகரம் கடும் தாக்குதலினால் பெரும் சேதம் அடைந்திருப்பதாகவும் தெரிவித்துள்ளார்.

அத்தோடு ஈராக்கைச் சூழவுள்ள ஜோர்டான், ஈரான் அரசாங்கங்களும் குடியிருப்புக்கள் மீது அமெரிக்க விமானங்கள் மோசமான குண்டுத் தாக்குதலை நடத்துவதாகக் கண்டித்துள்ளார்.

இவ்வளவு பேருடைய தகவல்களையும், கண்டிப்புக்களையும் அமெரிக்க ஜனாதிபதி ஜோர்ஜ்புஷ் நிராகரித்திருப்பதோடு குடியிருப்புக்கள் வணக்கஸ்தலங்கள் மீதும் குண்டு வீசப்படவில்லை எனவும் அவ்வாறு குண்டு வீசப்படுவதாக கண்டித்த ஜோர்டான் மன்னரையும் எச்சரித்துள்ளார்.

இதே போன்றதொரு நிலையே இன்று இலங்கையில் தமிழ்ப்பகுதிகளிலும் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றது. வல்வெட்டித்துறை குண்டு வீசி அழிக்கப்பட்டது. புதுக்குடியிருப்பில் அகதி முகாமின் மீது குண்டு வீசப்பட்டு பலர் கொல்லப்பட்டனர். இதே போன்று தினசரி தமிழ்ப் பிரதேசம் எங்கும் குடியிருப்புக்கள் வைத்தியசாலைகள், வணக்க ஸ்தலங்கள், போக்குவரத்து வாகனங்கள், என்பன மீது குண்டுத் தாக்குதல்கள் மேற்கொள்ளப் பட்டுவருகின்றன.

இவை தொடர்பாக சிறிலங்கா அரசாங்கத்திடம் பல வேறுமட்டங்களில் இருந்தும் பலமுறை தெரிவிக்கப் பட்டது. உள்நாட்டு வெளிநாட்டு பத்திரிகைகளும் தெரிவித்தன. சர்வதேச நிறுவனங்களும் தெரிவித்துள்ளன. நேரில் பார்வையிட்ட பல செய்தியாளர்களும் தெரிவித்தார்கள்.

ஆனால் சிறிலங்கா அரசாங்கத்தின் சார்பில் சிறிலங்கா பாதுகாப்பு இணை அமைச்சர் ரஞ்சன் விஜேரட்ன இக் குற்றச்சாட்டை திட்டவட்டமாக மறுத்துள்ளதோடு, அமெரிக்க அதிபர் ஜோர்ஜ்புஷ்ஷிற்கும் ஒரு படிமேலே போய் அவ்வாறு தாக்குதல்கள் நடந்திருந்தால் அவ்வாறு தாக்குதல் மேற்கொண்ட விமானிகளுக்குத் தண்டனை வழங்கப்படும் எனவும் தெரிவித்துள்ளார்.

அவ்வாறானால் இவர்கள் யார் சொல்வதை நம்புவார்கள்? குடிமக்கள் மீதும், தேவாலயங்கள் மீதும் குண்டுகளை வீசியவர்கள் வந்து சொன்னால்தான் நம்புவார்களா? இல்லை. அதையும் அவர்கள் நம்ப மாட்டார்கள். ஏனெனில் அவ்வாறான தாக்குதல்களுக்கு உத்தரவு இடுவதே அவர்கள் தான். ஆகையினால் கண்ணால் கண்டு தாம் உறுதிப்படுத்தும் வரை எதையும் அவர்கள் நம்ப மாட்டார்கள். ஏனெனில் தாம் பார்வையிடும் வரை விமானிகள் பொய் கூறி விட்டார்களோ என்ற சந்தேகம் அவர்களுக்கு இருக்கும்.

அதேவேளை கண்ணால் கண்டு தாம் உறுதிப்படுத்துவதையும் அவர்கள் வெளியில் தெரிவிக்கவும், ஒத்துக் கொள்ளவும் மாட்டார்கள். ஏனெனில் திட்டமிட்ட கொலைகள் செய்பவர்கள் ஒரு போதும் தமது குற்றத்தை ஒத்துக் கொள்வதில்லை, அவர்கள் பொய்யர்கள்; கிரிமினல்கள்.

## இந்திய வல்லாதிக்கம்

# “போராட்டத்தை நசுக்கிய போது உயிரை மதியாது போராடியவர்”

## மேஜர் பிரசாத் நினைவஞ்சலி கூட்டத்தில் ஆஞ்சநேயர்

இந்திய வல்லாதிக்கம் நம் மக்களையும் நமது விடுதலைப் போராட்டத்தையும் நசுக்கிய போது நமது மக்கள் நிலை தளராமல், கலங்காமல் தமது உயிரை அர்ப்பணித்து நமது மக்களுக்கு உரமூட்டி விடுதலைப்போராட்டத்தைபலப் படுத்தியவர் மேஜர் பிரசாத் ஆவார். தியாகிகளால் கட்டியெழுப்பப்பட்ட நமது இந்த விடுதலைப் போராட்டத்தை அரசியல், இராஜதந்திர இராணுவ, கலாசார, பொருளாதார ரீதியில் அழித்தொழிக்க முடியாத நிலையில் இன்று ஸ்ரீலங்கா அரசு உளவியல் முறையில் நமது போராட்டத்தை நசுக்க முயலுகிறது. யுத்தத்தினால் ஏற்பட்ட அசாதாரண சூழ்நிலையில் காசுள்ளவன் பணக்காரன் பொருள்களை வாங்க ஏழைகள் பட்டினியால் வாடும் நிலைமையானது தற்போது கொண்டு வரப்பட்டிருக்கும் விலைக்கட்டுப்பாட்டு திட்டம் மூலம் நீங்கியூவில் நின்றாவது இன்று அனைவரும் பொருள்களை வாங்க முடிகிறது. யுத்த நிறுத்தத்தைக் கடைப்பிடித்ததன் மூலம் விடுதலைப்புலிகள் யுத்தப்பிரியர்கள் அல்ல என்பதை உலகுக்கு எடுத்துக் காட்டி ஸ்ரீலங்கா அரசின் போலிப் பிரசாரங்களை முறியடிக்க முடிந்துள்ளது.

இவ்வாறு நேற்று மூளாய் பிள்ளையார் கோயிலடியில் நடைபெற்ற மேஜர் பிரசாத்தின் மூன்றாவது ஆண்டு நினைவு நிகழ்ச்சிகளில் கலந்து கொண்டு உரையாற்றிய விடுதலைப்புலிகளின் யாழ். மாவட்ட பிரச்சாரப் பொறுப்பாளர் திரு. ஆஞ்சநேயர் குறிப்பிட்டார். (20)

# ஜோன் மேயர் வீட்டின் மீது மோட்டார் ஷெல் தாக்குதல்

(லண்டன்)

மத்திய லண்டனில் பாதுகாப்பு அமைச்சர் அலுவலகத்துக்கு அருகாமையில் உள்ள இங்கிலாந்துப் பிரதமரின் இல. 10, டவுணிங் வீதியிலுள்ள உத்தியோகபூர்வ வாசஸ்தலத்தைக்குறிபார்த்து மோட்டார் ஷெல் தாக்குதல் நேற்று முன்தினம் மேற்கொள்ளப்பட்டது.

பாரிய சத்தத்துடன் சக்தி வாய்ந்த மோட்டார் ஷெல்கள் இரண்டு வெடித்ததாகச் சம்பவத்தை நேரில் கண்டவர்கள் தெரிவித்தார்கள்.

இச் சம்பவத்தின் போது போர்க்கால அமைச்சரவையின் கூட்டம் பிரதமரின் இல்லத்தில் நடந்து கொண்டிருந்தது.

இச்சம்பவத்துக்கும் ஐ.ஆர்.ஏ. என்ற ஐரிஷ் விடுதலை இராணுவத்தினருக்கும் தொடர்பிருப்பதாக லண்டன் பொலிஸ் வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

ஐ.ஆர்.ஏ. என்ற குறியீடுகள் மோட்டார் ஷெல் கலன்களில் பொறிக்கப்பட்டுள்ளதாக பொலிஸ் தரப்பில் தெரிவிக்கப்பட்டது.

ஏவப்பட்ட ஷெல்லில் ஒன்று பிரதமரின் உத்தியோகபூர்வ இல்லத்தின் பின்பக்கமாக வீழ்ந்து வெடித்தது. அதிர்ச்சியினால் பலகட்டடங்களின் ஜன்னல் கண்ணாடிகள் வெடித்துச் சிதறின.

உடனடியாக போர்க்கால அமைச்சரவைக் கூட்டம் கட்டடத்தில் மற்றொரு பாதுகாப்பான அறைக்கு மாற்றப்பட்டது.

தாக்குதலில் எவரும் காயப்பட்டதாக லண்டன் செய்திகள் தெரிவிக்கவில்லை.

## சோவியத் படைகள்

# கிழக்கு ஜேர்மனியிலிருந்து 1994-ம் ஆண்டுக்குள் விலகும்

(பேர்லின்)

கிழக்கு ஜேர்மனியிலிருக்கும் 3 இலட்சத்து 80,000 இராணுவத்தினரை 1994ஆம் ஆண்டிற்குள் அங்கிருந்து விலக்கிக் கொள்ளப்படும் என்று கிழக்கு ஜேர்மனியிலுள்ள சோவியத் இராணுவத்தின் தலைவர் ஜெனரல் மாக்பெத் வுட்ஸ்கோ தெரிவித்துள்ளார்.

கடந்த புதனன்று ஜேர்மனிய பாதுகாப்பு அமைச்சரைச் சந்தித்த இந்த இராணுவத்தலைவர் இந்த உறுதிமொழியினை வழங்கினார்.

சென்றவருடம் கையொப்பமிடப்பட்ட ஜேர்மனிய-சோவியத் உடன்பாட்டிற்கமையவே இராணுவத்தினரின் இந்த வெளியேற்ற நடவடிக்கை அமைகிறது.

# 20 மில். டாலர் பெறுமதியான நூல்கள் ஒருவரால் திருட்டு

(நியூயோர்க்)

அமெரிக்காவில் உள்ள நூலகங்களிலிருந்து சுமார் 20 மில்லியன் டாலர் பெறுமதியான நூல்களையும், கையெழுத்துப் பிரதிகளையும் திருடியதாக அமெரிக்கரான லம்பேர்க் என்பவர் மீது வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

42 வயதான இந்தப் புத்தகத் திருடனுக்கு 35 ஆண்டுகள் சிறைத் தண்டனையும் 1 மில்லியன் டாலர் அபராதமும் அமெரிக்க சட்டத்தின்படி விதிக்கப்படலாம்.

சுமார் 300 நூலகங்கள் மற்றும் அரும் காட்சி நிலையங்களிலிருந்து 20,000க்கு அதிகமான புத்தகங்களை இவர் திருடியது ஊர்ஜிதம் செய்யப்பட்டுள்ளது. இவர் புத்தகங்களைத் தான் திருடியது உண்மையே என்று ஒத்துக் கொண்ட இவரது சட்டத்தரணிகள். 25 ஆண்டுகளாக இவருக்கு மனநிலை சரியில்லை என்று வாதிட்டனர்.

# குறிகாட்டுவான்துறை மீது ஷெல் தாக்குதல்

(புங்குடுதீவு)

நயினாதீவு கடற்படை முகாமில் இருந்து புங்குடுதீவு குறிகாட்டுவான் துறையை நோக்கி கடந்த மூன்றாம் திகதி ஞாயிற்றுக்கிழமை மாலை பலத்த ஷெல் தாக்குதல் நடத்தப்பட்டது. சுமார் அரைமணி நேரமாக நடாத்தப்பட்ட இத்தாக்குதலினால் குறிகாட்டுவான் துறையில் உள்ள கடைகள் சில பலத்த சேதமடைந்துள்ளன. இதே வேளை அவ்விடத்தில் பொது மக்கள் பலர் நின்றனர். ஆயினும் எவரும் காயம் எதுவும் இன்றி தெய்வாதீனமாக தப்பினர். மேற்படி தாக்குதலின் போது ஏவப்பட்ட ஷெல்களில் கடைகளை சேதமாக்கிய ஷெல்களை விட மற்றயவை வளவுகளில் வீழ்ந்து வெடித்தன. தாக்குதல் நடந்த தினத்திற்கு அடுத்த நாளாகிய நான்காம் திகதி திங்கட்கிழமை காலை இரண்டு ஹெலிகொப்டர்கள் பிரஸ்தாப முகாமில் மாறி மாறி இறங்கிச் சென்றன என்பது குறிப்பிடத்தக்கது. (22)

# புங்குடுதீவு நோக்கி ஷெல் வீச்சு

(புங்குடுதீவு)

நயினாதீவில் உள்ள ஸ்ரீலங்கா கடற்படையினர் தற்போது புங்குடுதீவுப் பகுதியை நோக்கி பலத்த ஷெல் தாக்குதலை மேற்கொண்டு வருகின்றனர். பிரஸ்தாப முகாமில் இருந்து ஏவப்படும் ஷெல்கள் புங்குடுதீவின் பல பகுதிகளிலும் வீழ்ந்து வெடிக்கின்றன. (22)

# விவசாயக் கருத்தரங்கு

(சுன்னாகம்)

சுன்னாகம் லயன்ஸ் கழகம் யாழ்ப்பாணக் கல்லூரி விவசாய நிறுவனத்துடன் இணைந்து நடாத்தும் விவசாயக்கருத்தரங்கு எதிர்வரும் சனிக்கிழமை 16ஆம் திகதி சுன்னாகம் லயன்ஸ் கழகத் தலைவர் எஸ்.பி. சிவஞானம் தலைமையில் மருதனாமடம் யாழ்ப்பாணக் கல்லூரி விவசாய நிறுவனத்தில் காலை 8-30 மணிக்கு நடைபெறும்.

# சைவத்தொண்டர் நிலைய ஆண்டு விழா

(கொழும்புத்துறை)

யாழ் திருநெல்வேலி வடக்கு நாவலடி ஒழுங்கையில் அமைந்துள்ள சைவத்தொண்டர் நிலையத்தின் 1 ஆவது ஆண்டு விழா இன்று சனிக்கிழமை காலை 9.00 மணிக்கு நிலைய மண்டபத்தில் தலைவர் திரு செ. ரதீஸ்வரன் தலைமையில் நடைபெறவுள்ளது. (24)

# ராஜீவை மீண்டும் பிரதமராக்க இந்திரா காங்கிரஸ் முயற்சி

(லண்டன்)

புதுடில்லியில் மீண்டும் அரசியல் நெருக்கடி ஆரம்பித்துள்ளது. இந்திரா காங்கிரஸ் கட்சித் தலைவர் ராஜீவ்காந்தியை மீண்டும் பிரதமராக்கும் முயற்சிகள் முனைப்படைந்திருப்பதாக அக் கட்சிப் பேச்சாளர் ஒருவர் புதுடில்லியில் கூறியுள்ளார்.

வி. பி. சிங் தலைமையிலான ஜனதாக் கட்சியில் இருந்தும், சந்திரசேகர் தலைமையிலான ஜனதா தள் (எஸ்) கட்சியிலிருந்தும் மூன்றிலொரு பங்கு எம்பிக்களை கவர்ந்திழுக்கும் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டிருப்பதாக பி. பி. ஸியின் புதுடில்லி முகவர் குறிப்பிட்டுள்ளார். இந்தியாவிலுள்ள கட்சித் தகவல் சட்டமும் மூன்றிலொரு பங்கு எம். பிக்கள் மனம் மாறுவதில் உள்ள தடங்கலும் மட்டுமே இப்போதைக்கு தடையாக இருப்பதாக கூறப்படுகிறது.

இதேவேளை வளைகுடாப் போரிலீடுபட்டுள்ள அமெரிக்கா தலைமையிலானகூட்டுப்படைகளுக்கு இந்திய மண்ணில் எரிபொருள் நிரப்ப வசை செய்யப்படுவதை தமது கட்சி தொடர்ந்து தீவிரமாக எதிர்க்கும் என்று இந்திராகாங்கிரஸ் கட்சிப் பேச்சாளர் எம். ஜே. அக்பர் புதுடில்லியில் கூறியுள்ளார்.

இதனிடையில் சபாநாயகரால் பதவிநீக்கம் செய்யப்பட்ட வெளியுறவு அமைச்சர் வி. சி. சுக்லா உட்பட்ட எம். பிக்களை இராஜினாமா செய்யுமாறு இந்திரா காங்கிரஸ் கட்சி வலியுறுத்தி வருகிறது.

## உறவு சுமுகமாக இல்லை; ஆனால் விரிசல் இல்லை

(டில்லி)

**- சந்திரசேகர்**

காங்கிரஸ் கட்சியுடனான உறவில் சுமுகமான நிலை இருக்கிறது எனக் கூற முடியாத போதும் உறவில் விரிசல் இல்லையென புதுடில்லியில் செய்தியாளரிடம் பிரதமர் சந்திரசேகர் கூறியுள்ளார்.

மனிதாபிமான அடிப்படையில் போர் ஆயுதங்களற்ற விமானங்களுக்கு மட்டுமே எரிபொருள் வசதி வழங்கப்படலாமெனவும் இது பற்றி பொதுமக்கள் குழப்பமடையத் தேவையில்லை எனவும் பிரதமர் சந்திரசேகர் வலியுறுத்தியுள்ளார்.

## பிற்போடப் பட்டுள்ளது

(யாழ்ப்பாணம்)

யாழ் பல்கலைக்கழகத்தில் இன்று நடைபெறவிருந்த ஊழியர்தின விழாவும், பல்கலைக்கழக சேவையில் நீண்டகாலம் பணியாற்றியவர்களுக்கான பாராட்டு விழாவும் தவிர்க்கமுடியாத காரணங்களினால் பிற்போடப்பட்டுள்ளதாகவும் புதிய திகதி பின்னர் அறிவிக்கப்படுமெனவும் யாழ். பல்கலைக்கழக பதிவாளர் அறிவித்துள்ளார். (மு)

## அநாதரவாக வயோதிபர் சடலம்

(செ. த. மை)

வயோதிபரின் சடலம் ஒன்று நேற்று பிற்பகல் (08-02-91) செம்மணிவீதியிலுள்ள நாயன் மார்க்கட்டு பாரதி மன்றத் திற்கருகாமையில் இடக்காணப்பட்டது.

கைதடி வயோதிபர் இல்லத்திலிருந்து இரு நாள்விடுமுறை பெற்றுச்சென்று சந்தசண்முகம் (வயது 70) என்பவரின் சடலமே இது வெனத் தெரிவிக்கப்படுகிறது.

## தமிழக சட்டப்பேரவை தேர்தலை தி. மு. க. பகிஷ்கரிக்காது

**- கருணாநிதி**

(சென்னை)

தமிழ்நாடு சட்டப்பேரவைக்கு நடக்கவிருக்கும் தேர்தலை திராவிட முன்னேற்றக் கழகம் பகிஷ்கரிக்காதென அந்தக் கட்சியின் தலைவர் மு. கருணாநிதி சென்னையில் நேற்றுக் கூறியிருக்கிறார்.

மத்திய அரசு தனது அரசைப் பதவிநீக்கம் செய்ததால் ஏற்பட்ட மனத்தாங்கலின் காரணமாகவே எதிர் வரும் சட்டப்பேரவைத் தேர்தலில் போட்டியிடுவதால் பயனிருக்காது என்று தான் முன்பு கூறியதாக அவர் விளக்கினார்.

தோழமைக் கட்சிகளுடன் தி. மு. க. பேச்சுவார்த்தைகளைத் தொடங்கிவிட்டதாக வந்த செய்திகளையும் கருணாநிதி மறுத்தார்.

## ஒருவர் பலி

(கொடிகாமம்)

கொடிகாமத்தில் பொதுமக்கள் வாழும் குடியிருப்புக்கள் மீது சிறிலங்கா விமானப்படையினர் நடாத்திய குண்டுவீச்சில் ஒருவர் கொல்லப்பட்டுள்ளார்.

கடந்த வியாழனன்று காலை 6 20 மணியளவில் இரு குண்டு வீச்சு விமானங்கள் நடாத்திய குண்டுவீச்சின் போது பொதுமகன் ஒருவர் உடல் சிதறி ஸ்தலத்திலேயே கொல்லப்பட்டார்.

# 23 ஆம் நாள் வளைகுடாப் போர்

★ ஜெர்மனுக்கு வழங்கும் உதவிகளை மறுபரிசீலனை செய்யப்போவதாக அமெரிக்க வெளியுறவுச் செயலாளர் ஜேம்ஸ் பேக்கர் தெரிவித்துள்ளார்.

★ ஈராக் மீது இரசாயன ஆயுதங்கள் பாவிப்பது என்பதற்கு இடமில்லை என்று பிரான்ஸ் நாட்டு ஜனாதிபதி தெரிவித்துள்ளார். அப்படியான ஆயுதங்களை ஈராக்கிற்கு எதிராகப் பாவிப்பது காட்டுமிராண்டித்தனமானது என்றும் அவர் தெரிவித்தார்.

★ ஈராக்கில் அப்பாவி முஸ்லிம் மக்கள் கொல்லப்படுவதைப் பார்த்துக்கொண்டு சும்மா இருக்க முடியாது என ஈரான் ஜனாதிபதி றப்சான்ஜானி அறிவித்துள்ளார்.

★ வளைகுடாவில் தரைப்படைத் தாக்குதலின் உடனடித் தேவையை பிரான்சிய ஜனாதிபதி மித்ரோம் வலியுறுத்தியுள்ளார். நீண்ட நாட்களுக்கு அமெரிக்கா தலைமையிலான கூட்டுப் படைகள் வளைகுடாவில் விமானத் தாக்குதலை மேற்கொள்ளாமல் தரைப்படைப் போரின் மூலம் போரை முடிவிற்கு கொண்டுவர அவர் விரும்புகிறார் என பி. பி. ஸி. அறிவித்தது.

★ பிரித்தானிய இராணுவ உயர் அதிகாரி ஈராக்கிய இராணுவ நிலைகள் மீது பெருமளவிலான இடைவிடாத விமானத் தாக்குதலை நடத்துவதே அடுத்த கட்ட நடவடிக்கை என்று குறிப்பிட்டுள்ளார்.

★ வளைகுடாப் போரில் தரைப்படைத் தாக்குதல் ஆரம்பிக்க இருக்கும் அதேநேரம் 17.000 மாலுமிகளுடன் அமெரிக்க கப்பல்படை குவைத்துக்கு வந்து கொண்டிருக்கின்றன.

★ பிரித்தானிய விமானங்கள் ஈராக்கின் ஆயுத களஞ்சியங்கள் மற்றும் ஸ்கட் ஏவுகணைத் தளங்கள் மீது 14 தொன் எடையுள்ள குண்டுகளையும், பாக்தாத்தின் தெற்கிலுள்ள இலக்குகள் மீது 18 தொன் எடையுள்ள குண்டுகளையும் வீசியதாக பிரித்தானிய இராணுவ அதிகாரி கப்டன் நியால் இர்வின் கூறினார்.

★ சவூதி அரேபியா மீது நேற்றுக் காலை ஈராக் ஸ்கட் ஏவுகணைத் தாக்குதலை மேற்கொண்டது. இந்த ஸ்கட் ஏவுகணையை அமெரிக்காவின் பேற்றியாட் ஏவுகணை தாக்கி அழித்துவிட்டதாக அமெரிக்க அதிகாரிகள் தெரிவித்தனர். ஆனால் நேரில் பார்த்தவர்கள் இவை இரண்டும் சேர்ந்து விழுந்ததில் றியாட்டில் பல சேதங்களை ஏற்படுத்தியதாக கூறுகின்றனர் என அங்கிருந்து வரும் செய்திகள் தெரிவிக்கின்றன

## உலர் உணவு விநியோகம் குழப்பம் நீக்கப்படும்

**- அரச அதிபர்**

கடந்த ஆண்டு இராணுவ நடவடிக்கைகளால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு வழங்கப்படும் உலர் உணவு நிவாரணத்தில் பெருமாற்றம் செய்யப்படவுள்ளது

பாதிக்கப்பட்ட மக்களுக்கு வழங்கப்பட்டுவந்த 1500ரூபாவும் அதற்கு குறைந்தோருக்கான நிவாரணம் அந்த வருமானத்திற்குகூடியோருக்கான நிவாரணம் என பெரும் சிக்கல்களை உண்டுபண்ணி வந்தன. இதனை கருத்தில் கொண்டு 1991ஆம் ஆண்டுக்கு ஆரம்பிக்கப்பட இருக்கும் உலர் உணவு நிவாரணத்திட்டத்தை முதலிலிருந்து ஆரம்பிக்க தாம் உத்தேசித்திருப்பதாகவும் அரச அதிபர் கூறினார். (சை)

## நோயினால் மரணம்

(செ. த. மை)

சிற்றூரவை உறுப்பினர் ஒருவர் மூளைக்காய்ச்சல் நோயினால் பாதிக்கப்பட்டு நேற்று (8 ஆம் திகதி) மரணமானார். அளவெட்டி இழக்கு சிற்றூர் அவை உறுப்பினரான ம. முருகையா (62 வயது) என்பவரே மூளைக்காய்ச்சல் நோயினால் மரணமானவராவார். இவர் 4 பிள்ளைகளின் தந்தையாவார்.

---

திருமலையில்

சிறிமாபுரம், பாலையூற்று, மட்கோ, கல்லிறவு, புல்மோட்டை, சீனன்குடா, கமே தங்கபுர, 5 ஆம்கட்டை, மகாதிவுல்வெவ போன்ற பகுதிகள் குறிப்பிடக்கூடிய அம்சமாகும். மேலும் இக் குடியேற்றவாசிகளுக்கு அரச உதவிகளுடன் அரச சார்பற்ற நிறுவனங்களின் உதவியும் போதியளவு கிடைத்து வருகின்றது.

மேலும் புனர்வாழ்வு என்ற போர்வையிலும் சிங்களவர்களை குடியமர்த்துவதற்கான ஒழுங்குகளும் மேற்கொள்ளப்பட்டுள்ளது. 1987 ஜூலை மாதத்தின் பின் பாதிக்கப்பட்டவர்களுக்கு 'வீடு அமைத்துக்கொடுத்து புனர்வாழ்வு மேற்கொள்வது' என்ற திட்டத்தின்படியே நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகிறது.

இக் குடியேற்றங்களை மேற்கொள்வதில் திருமலை அரசாங்க அதிபர், திருமலை மாவட்டத்தின் இராணுவத் தளபதி ஆகியோரது தலைமையில் திருமலை மாவட்டத்திலுள்ள அரச நிறுவனங்களின் தலைமைஉத்தியோகஸ்தர்கள் ஈடுபட்டு வருகிறார்கள். திருமலைக்கு அண்மையில் சிறிலங்கா ஜனாதிபதி பிரேமதாசாவின் வருகையைத் தொடர்ந்து இவை தொடர்பாக ஒரு விசேட குழு பிரேமதாசாவினால் அமைக்கப்பட்டது. இக் குழு சமாதானம் என்ற போர்வையில் தமிழ் மக்களுக்கு எதிரான நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறது. இக் குழுவில் பெரும்பாலும் சிங்களவர்களே இடம்பெற்றுள்ளனர். அண்மையில் இக் குழுவின் கூட்டம் திருமலையில் நடைபெற்றபோது மாவட்டத்தின் பல பகுதிகளிலும் தமிழ் மக்களுக்கு எதிராக மேற்கொள்ளப்பட்டு வரும் நடவடிக்கை பற்றி ஒரு தமிழ் அங்கத்தவர் குறிப்பிட்டபோது இராணுவத் தளபதியால் மிரட்டப்பட்டுள்ளார். மேலும் இக் குழுவே புனர்வாழ்வு நடவடிக்கைகளையும் கண்காணித்து வருகிறது என்பது குறிப்பிடத்தக்கது.

---

மட்டக்களப்பில்

கள் சண்ணிவெடித் தாக்குதலை நடாத்தியபோது இராணுவத்தினரின் கவசவாகனம் ஒன்று பலத்த சேதமடைந்தது. இந்தத் தாக்குதலில் இராணுவத்தினருக்கு ஏற்பட்ட உயிர்ச் சேதங்கள் பற்றிய விபரங்களை பெற்றுக்கொள்ள முடியவில்லை.

---

குப்பைத்

குப்பை கூளங்களுடன் சேர்த்து அள்ளுவதை அவதானிக்க முடிந்ததாம்.

உதைதாசவிளையாட்டு மைதானத்திற்கு முன்னால் கைவிடப்பட்ட தேசியக்கொடிகளை நகர சுத்திகரிப்புத் தொழிலாளர் அள்ளுவதை அவதானித்த பொதுமக்கள், தேசியக் கொடிகளை சோடனைக் கடதாசிகள் போல் உபயோகித்துப் பின்னர் கவனிப்பாரற்று வீதியோரங்கவில் கிடப்பதைக் கண்டு கவலை தெரிவித்தனர். தேசியக் கொடிகள் வீடுகளிலும், புகையிரதங்களிலும் மதுபானக் கடைகளிலும் பறக்கவிடப்பட்டிருந்ததுதெரிந்ததே 43-ஆவது சுதந்திர தினம் தொடர்பாக விளையாட்டுப் போட்டிகளில் பங்கு கொண்டவர்கள் தங்கள் முகத்தில் சொட்டும் வியர்வையையும் தேசியக் கொடிகளால்துடைத்துக் கொண்டார்கள் இவ்வாறு ஐலன்ட் செய்திமேலும் தெரிவிக்கிறது.

---

குற்றம்

விசாரணை நடத்தப்படவேண்டும் எனக்கோரும் பிரேரணை ஒன்றை எதிர்க்கட்சிகள் பாராளுமன்றத்தில் தாக்கல் செய்திருந்தன. இந்தப் பிரேரணை மீதான விவாதம் இடம்பெற்றபோதே மகிந்த ராஜபக்ஸ மேற்கண்ட கேள்வியை எழுப்பினார்.

எனினும் அரசதரப்பு எம். பிக்கள் எதிர்த்து வாக்களித்தமையால் இப்பிரேரணை தோல்வியடைந்தது. அத்துடன் இனி நீதிமன்ற விசாரணைக்கான வாய்ப்பேதும் இடம்பெறச் சந்தர்ப்பமில்லை என்பதும் தெளிவாகியது.

இதனிடையில் அமெரிக்க சார்பு கூட்டுப்படை விமானங்களுக்கு எரிபொருள் வசதி அளிக்கப்பட்டிருப்பதை சிறிலங்கா சுதந்திரக் கட்சியும், நவசமசமாஜக் கட்சியும் கண்டித்துள்ளன.

---

சவூதி

ஈராக்கிற்கு ஆதரவான உணர்வலைகளும் வலுவடைந்து வருகின்றன.

சில அரசாங்கங்கள் அமெரிக்காவிற்கு ஆதரவாக தமது படைகளை அனுப்பி வைத்துள்ள போதும் மக்களின் உணர்வுகள் அமெரிக்காவிற்கு எதிரானதாக இருப்பதற்கு இத்தகைய அதாவது எகிப்தின் நடவடிக்கைகளே காரணமாகுமென்றுகூறப்படுகிறது

---

டிக்சிற்

பான நாடுகளுக்கிடையில் நல்லுறவை வளர்ப்பது ஒரு ராஜதந்திரியின் கடமை என்றும், ஐ. பாராபட்சமில்லாமல் நடந்து கொள்வார் என்று தான் நம்புவதாகவும் அவரிடம் தெரிவித்தார்

இந்தியாவிற்கும், சிறிலங்காவுக்குமிடையில்நல்லுறவைவளர்க்க ஜாராஜரீக முயற்சிகளை மேற்கொள்வார் என்று தான் நம்புவதாகவும் வண. பலிப்பான மேலும் தெரிவித்தார்

தமிழ் மக்களுக்குரிய உரிமைகளை வழங்க பௌத்தமகாசங்கமோ, சிங்களவர்களோ என்றுமே எதிர்ப்புத் தெரிவிக்கவில்லையெனவும் அவர் தெரிவித்தார்.

அரசியல் தலைமைத்துவவாதிகளாலேயே தமிழ் சிங்கள வேற்றுமைகள் வளர்க்கப்பட்டது என்றும், இதற்கு பொதுமக்கள் காரணமில்லை என்று மேலும் தெரிவித்தார்.

---

சாவகச்சேரி

நேற்றுக்காலை 11.00 மணியளவில் இப்பகுதியின் வான் பிரதேசத்திற்குள் புகுந்துபல முறை வட்டமிட்ட இருகுண்டு வீச்சு விமானங்கள் குண்டுகளை வீசி உக்கிரமாக தாக்குதலை நடாத்தியதில் ஒரு பொது மகன் கொல்லப்பட்டுள்ளார்.

---

கஜுவத்தையில்

அதிரடித் தாக்குதலைத் தொடுத்தனர். புலிகளின் தாக்குதலைத் தொடர்ந்து நிலைகுலைந்த இராணுவத்தினர் பின்வாங்கி முகாமிற்குச் சென்றனர். இராணுவத்தினரின் சேதவிபரங்கள் தெரியவரவில்லை.

---

ஈராக்கை

அழித்துவிடுவதல்ல என்று பேட்டியொன்றில் இவ்வாறு அவர் தெரிவித்தார்.

குவைத்தில் இருந்து ஈராக் வெளியேற ஐ. நா. சபை தந்த அதிகாரத்தை மட்டுமே கூட்டுப் படைகள் மேற்கொள்ள வேண்டுமென்றும், அதனைத் துஷ்பிரயோகம் செய்யக்கூடாது என்றும் மித்ரோன் தெரிவித்தார்.

அத்துடன் வளைகுடாப் போருக்குப் பின்னர் மேற்கு ஆசியா பற்றிய சர்வதேச அமைதி மகாநாடு ஒன்று நடைபெறவேண்டுமென்றும் குறிப்பிட்டார்.

இதற்கு முன்னதாக வளைகுடாப் போர் ஆரம்பித்த போது ஈராக்மீது விமானத் தாக்குதலை தமது நாடு மேற்கொள்ளாது என மித்ரோன் அறிவித்திருந்ததைதெரிந்ததே

---

மாலைதீவில்

கம் எந்த அணியையும்சேராமல் நடுநிலை வகிப்பதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

இரண்டாம் உலக யுத்தத்தின் போது மாலைதீவுக்குச் சொந்தமான கான்தீவு கப்பல்களுக்கு எரிபொருள் நிரப்புவதற்காகவும் 1976வரை அங்கு இங்கிலாந்தின் ஒருதளம் இருந்ததுங்குறிப்பிடத்தக்கது.

---

இப்பத்திரிகை யாழ்ப்பாணம் மகேந்திரா வீதி, 31ஆம் இலக்கத்திலுள்ள ''ஈழநாதம்'' பணிமனையில் 1991 ஆம் ஆண்டு பெப்ரவரிமாதம் 09 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.